2019 ஜூலை 3]

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

22—

விளையாட்டு மைதானம்

***2073—திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதி, உடன்குடி பகுதியில் கபாடி, கால்பந்து, கையுந்துபந்து மற்றும் மட்டைப்பந்து விளையாட்டுகளுக்கான விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருச்செந்தூர் தொகுதி, உடன்குடி பகுதியில் கால்பந்து, கைப்பந்து, மட்டைப்பந்து போன்ற விளையாட்டுகளை விளையாடுவதற்கு விளையாட்டு மைதானம் விளையாட்டுத் துறையின் சார்பாகக் கொண்டு வருவதற்கு இப்போது எந்த சாத்தியக்கூறும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உடன்குடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள*

கிராமப்புறங்களில், கபாடி, கைப்பந்து, கால்பந்து, மட்டைப்பந்து போன்ற விளையாட்டுகளில் ஆர்வமும், ஈடுபாடும் கொண்ட இளைஞர்கள் அதிக அளவில் உள்ளனர். அவர்கள் மாவட்ட அளவிலும், பல்கலைக்கழக அளவிலும், மாநில அளவிலும் விளையாட்டுகளில் சிறந்து விளங்கி வருகின்றனர். அப்படிப்பட்ட இளைஞர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் விளையாடுவதற்கும், பயிற்சிகள் மேற்கொள்வதற்கும் உடன்குடி பகுதியில் அரசு விளையாட்டு மைதானம் இல்லாத ஒரு நிலை இருக்கின்றது. அதனால், உடன்குடி பகுதியில் உள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் இளைஞர்களின் நலன் கருதி, இளம் வீரர்களை உருவாக்குவதற்கு வசதியாக அரசு சார்பில் விளையாட்டு மைதானம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன். மேலும், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், அடுத்த கேள்வி கேட்கும்போது கேட்கலாம். மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்தப் பகுதியில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றபோது, அதில் நான் கலந்து கொண்டிருக்கிறேன். அங்கு இடம் இல்லை; அவ்வளவுதான். இடம் கொடுத்தார்களேயானால், அதற்கான பரிசீலனையை அரசு செய்யும். சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், ஊராட்சியிடமிருந்து 2 அல்லது 3 ஏக்கர் நிலத்தை பெற்றுத் தருவாரேயானால், இந்த விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருச்செந்தூர் தொகுதியைச் சுற்றியுள்ள திருச்செந்தூர், நாசரேத், அதேபோல் வீரபாண்டிபட்டினம், காயல்பட்டினம் போன்ற பகுதிகளில் இருக்கின்ற இளைஞர்கள் அத்தனை பேரும் நன்றாகக் கபாடி

விளையாடுகின்றவர்களாக, கால்பந்து விளையாடுகின்றவர்களாக, கிரிக்கெட் விளையாடுகின்றவர்களாக இருக்கிற சூழ்நிலையில், அங்கு விளையாடுவதற்கேற்ப அரசு விளையாட்டு மைதானம் ஏதும் இல்லை என்கின்ற நிலை இருக்கின்றது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், என்னுடைய திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அந்தப் பகுதியிலேயே, கால்பந்து விளையாட்டில் அகில இந்திய அளவிலே விளையாடக்கூடிய விளையாட்டு வீரராக நாசரேத்தைச் சேர்ந்த குணபாண்டி அவர்களும், அதேபோல, கால்பந்து விளையாட்டில் அகில இந்திய அளவில் விளையாடக்கூடிய வீரபாண்டிபட்டினத்தைச் சேர்ந்த வீரரான அருளாண்டோ அவர்களும், அதேபோல, ஆசிய அளவில் கபாடி விளையாட்டு விளையாடுகின்ற வீரர்களும் இருக்கிறார்கள். இன்றைக்கு இந்தியாவிற்கு பெருமை சேர்க்கின்ற வகையில், வெற்றி வாய்ப்பைப் பெறுகின்ற விளையாட்டு ஒன்று இருக்கின்றது என்று சொன்னால் அது கபாடிதான். ஆசிய அளவில் நடைபெற்ற கபாடி போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டு பேர்களுக்கு Arjuna award வழங்கினார்கள். அவர்களில் ஒருவர் எங்களுடைய பகுதியிலே இருக்கின்ற மணத்தியைச் சேர்ந்த மணத்தி கணேசன் என்பவர். இப்படி, பல்வேறு விளையாட்டுகளில் ஆர்வமுள்ள விளையாட்டு வீரர்கள் எங்களுடைய திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் இருக்கிறார்கள். அதிலும், எங்களுடைய தூத்துக்குடி மாவட்டத்தில் விளையாட்டில் ஆர்வமுள்ளவர்கள் அதிக அளவில் இருக்கிறார்கள். அந்தவகையில், எங்களுக்கு ஒருங்கிணைந்த Indoor Stadium ஒன்று தேவை. எனவே திருச்செந்தூரிலாவது, நாசரேத்திலாவது அல்லது உடன்குடியிலாவது இந்த விளையாட்டு மைதானத்தை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும், முன் வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், உடன்குடிக்குதான் விளையாட்டு மைதானம் வேண்டுமென்று

கேட்டார். அதற்குப்பிறகு திருச்செந்தூரிலே அமைத்துத் தரப்படுமா என்று கேட்டார். திருச்செந்தூரிலே இப்பொழுது 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் Mini Stadium கட்டப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கபாடியைப் பொறுத்தவரையிலும், கணேசன் என்பவர் வெற்றிபெற்று இன்றைக்கு ஆசிய அளவில் பரிசு பெற்றிருக்கிறார் என்று குறிப்பிட்டார்கள். நாம் அனைவருமே இறைவனை வழிபடுகின்றபோது கணேசனை வணங்கி விட்டுத்தான் செல்கிறோம். ஆகவே, கணேசன் அங்கு வெற்றி பெற்றதற்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து நான் சொல்வது, இடத்தை அவர் பெற்றுத் தந்தால் உடனடியாக அங்கு ஸ்டேடியத்தை அமைப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அதைப்போலத்தான், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய பகுதியிலும் மிக விரைவிலேயே 16 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு வசதிகளுடன்கூடிய விளையாட்டு அரங்கத்தை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் விளையாட்டுத் துறையைப் பற்றிப் பேசினார்கள். என்னுடைய தொகுதியில் நாங்கள் ஆட்சியில் இருக்கிறபொழுதே ஒரு ஸ்டேடியம் அமைக்க வேண்டுமென்று முயற்சி செய்தோம். அது வழக்கினால் நின்று போயிருந்தது. அதெல்லாம் முடிந்து, இப்போது அங்கு ஒரு ஸ்டேடியம் அமைக்கப்போவதாக எனக்கு செவிவழி செய்திதான் வந்திருக்கிறது. இன்னும் யாரும் அதுகுறித்து சொல்லவில்லை. ஆனால், அதை உடனடியாக அமைத்துத் தந்தால் நன்றாக இருக்கும். எவ்வளவு விரைவில் அமைப்பீர்கள் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

2019 ஜூலை 3]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, V.I.T. என்ற அந்தக் கல்வி நிறுவனத்திடமிருந்து 37 ஏக்கர் நிலங்களை எடுத்துக்கொள்வது குறித்து வழக்கு மன்றத்திலே வழக்கு நடைபெற்றது. வழக்கு முடிந்தவுடன் அரசே எடுத்துக்கொள்ளலாம் என்று அந்தக் கல்லூரியும் நமக்கு அனுமதியைத் தந்திருக்கிறது. வழக்கு மன்றத்திலே நமக்குச் சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. டெண்டர் வேலை முடிக்கப்பட்டிருக்கிறது. டெண்டர் முடித்து, அப்பணிக்கு பூஜை போடுகிற நேரத்தில், நான் எதிர்க்கட்சித் துணைத் தலைவரையே அழைத்து அங்கே பூஜை போடுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக 16 கோடியே 45 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மிகவும் சுறுசுறுப்பானவர். சொன்னதை எல்லாம் தவறாமல் செய்யக்கூடியவர். பொள்ளாச்சி தொகுதி மக்களிடம் மிகவும் நெருக்கமானவர்; சொந்தக்காரர். அவர் பள்ளிக் கல்வித் துறை அமைச்சராகவும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராகவும் அமைச்சரவையிலே அங்கம் வகித்தபோது, நான் இந்த அவையிலே ஒரு கேள்வி கேட்டேன். பொள்ளாச்சி நகரம் என்பது 5, 6 சட்டமன்றத் தொகுதிகளுக்கு மையப் பகுதியிலே இருக்கிறது. கல்வி மாவட்டமாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறது. அங்கே ஓர் உள் விளையாட்டு அரங்கமும், திறந்தவெளி விளையாட்டு அரங்கமும் மற்றும் ஒரு நீச்சல் குளமும் அமைத்துத் தரப்படுமா என்று கேட்டேன். உடனடியாகச் செய்து தரப்படுமென்று சொன்னார்கள். இன்னும் அவை நிறைவேற்றப்படாமல் உள்ளன. அதற்கான இடங்களையும் ஒதுக்கித் தந்து, விளையாட்டுத் துறைக்கும் நான் பல கடிதங்களை எழுதியிருக்கிறேன். எனவே, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் தொகுதியைச் சேர்ந்த வேலூர் மாவட்டத்திற்கு சுமார் 16 கோடி ரூபாய் ஒதுக்கியதைப்போல,*

[2019 ஜூலை 3

அமைச்சர் அவர்களுக்குச் சொந்தமான பொள்ளாச்சி தொகுதிக்கு கொஞ்சம் கூடுதலாக நிதி ஒதுக்கி, உள் விளையாட்டு அரங்கம், திறந்தவெளி விளையாட்டு அரங்கம் மற்றும் நீச்சல் குளம் போன்ற அனைத்து வசதிகளையும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே செய்து கொடுப்பாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பினார்கள். பொள்ளாச்சி என்பது ஒரு கோட்டமாக இருக்கின்றது. அதுவும் அங்கே உள்ள இளைஞர்கள் பல்வேறு விளையாட்டுகளை சிறப்பான முறையிலே விளையாடி பரிசு பெற்றிருக்கிறார்கள். நான் சென்ற முறை சொன்னேன். அதற்குப் பிறகு உள்ள நிலை உங்களுக்குத் தெரியும். இப்போதும் அந்த நிலையிலேதான் நாங்கள் இருக்கிறோம். ஆகவே, இதைப்பற்றி பரிசீலித்து, மிக விரைவிலே அதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்படும். நீங்கள் சொல்வதுபோல கூடுதல் நிதி அங்கே தேவையில்லை. குறைந்தது 5 கோடி ரூபாய் இருந்தால் போதும். அதை வைத்துக்கொண்டே நீங்கள் சொல்கின்ற அத்தனை பணிகளையும் நிறைவேற்ற முடியும். அதற்கான நிதி குறித்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.

திரு. ஏ.பி. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதி கிராமங்கள் நிறைந்த பகுதி. இரண்டு மாணவிகள் தேசிய அளவிலே, ஆசிய அளவிலே வெற்றி பெற்று, பட்டங்களைப் பெற்றிருக்கின்றார்கள். தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த அணைக்கட்டு தொகுதியைச் சேர்ந்த அந்த 2 மாணவிகளுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய அணைக்கட்டு தொகுதியிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் 16 கோடியே 45 இலட்சம் ரூபாய் அளவில் அமைப்பதற்காக அறிவித்த அந்த விளையாட்டு மைதானத்தை ஊசூர் பகுதியிலே கட்டுவதற்கு திட்டமிடப்பட்டு, 3 மாத காலத்திற்கு முன்பாக டெண்டர்

2019 ஜூலை 3]

விடப்பட்டது. பின்னர், அந்த மைதானம் அந்த இடத்திலிருந்து, வேறோர் இடத்திற்கு மாற்றப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று அறிவித்தார்கள். எங்களுடைய பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. ஏழையெளிய மாணவர்கள் பயன்பெறக்கூடிய வகையிலே, அதை அங்கேயே அமைத்துத் தர வேண்டும். குறிப்பாக, அணைக்கட்டு தொகுதியிலே 37 ஏக்கர் நிலம் இருக்கின்றது. இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்திலே நிலுவையிலே இருந்தபோது, அணைக்கட்டு தொகுதியில் உள்ள அந்த இடம்தான் முதலிலே தேர்வு செய்யப்பட்டது.

முற்பகல் 10–20

ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எந்த இடத்தை முதலில் தேர்வு செய்து டெண்டர் விட்டீர்களோ, அதே இடத்தில், ஊசூர் பகுதியில், அணைக்கட்டு தொகுதியில் இருக்கக்கூடிய 59 கிராம ஊராட்சிகளில் வசிக்கின்ற ஏழையெளிய மக்கள் பயன்பெறக்கூடிய வகையில், கட்டித் தர வேண்டும். என்னுடைய தொகுதி மக்களுக்கு இந்த நன்மையை அரசு செய்து தர வேண்டுமென்றும், முதலில் திட்டமிட்ட இடத்திலேயே அமைப்பதற்கு டெண்டரை விட்டு, நீங்கள் பணியைத் தொடங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் துவக்க விழாவிற்கு என்னையும், எங்களுடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களையும் அழைத்தால், கண்டிப்பாக நாங்கள் வருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டுக்கு அணைக்கட்டு போட்டுவிட்டுத்தான் இதை மாற்றியமைத்திருக்கிறோம். ஆகவே, அவர் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். அவருடைய தொகுதிக்குத் தேவையான ஸ்டேடியத்தை, குறைந்த பரப்பளவில் உருவாக்குவதற்கு உரிய மதிப்பீடுகளை தயார் செய்து, அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இடமிருந்தால் மைதானம் அமைத்து கொடுக்கப்படும் என்ற ஓர் உறுதியை மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களுக்குக் கொடுத்தார்கள். அந்த அடிப்படையில், கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அழகப்பபுரம் கிராமத்தில் பள்ளிக் கல்வித் துறைக்குச் சொந்தமான ஓர் இடம் இருக்கிறது. அந்த இடத்தில் தற்போது இடிந்துபோன, சிதிலமடைந்த ஒரு கட்டடம் மட்டுமே இருந்துகொண்டிருக்கிறது. அதைச் சுற்றிலும் புதர் மண்டிக் கிடக்கிறது. தற்போது அந்தப் பகுதியைச் சார்ந்த இளைஞர்களெல்லாம் அந்த புதர் மண்டியுள்ள இடத்தில் உள்ள ஒரு பகுதியைச் சீரமைத்து, அதில் கபாடி மற்றும் வாலிபால் விளையாட்டுகளை விளையாடி வருகின்றனர். இப்போது பள்ளிக் கல்வித் துறை மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை ஆகிய இரண்டு துறைகளுமே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பொறுப்பில் இருக்கின்ற காரணத்தால், அந்த இடத்தை விளையாட்டுத் துறைக்கு மாற்றி, அங்கே கபாடி மற்றும் வாலிபால் விளையாடுவதற்கான ஒரு Indoor Stadium அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன். அதைப்போல. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஆஸ்டின், அத்துடன் முடியுங்கள்.

திரு. எஸ். ஆஸ்டின்: உடனே முடித்துவிடுகிறேன். அஞ்சுகிராமம் பேரூராட்சி பகுதிக்குட்பட்ட ரஸ்தாகாடு என்ற பகுதியில் கிட்டத்தட்ட இரண்டு, மூன்று ஏக்கர் அளவிற்கு அரசுக்குச் சொந்தமான இடம் காலியாக இருந்துகொண்டிருக்கிறது. அதில், அனைத்து விளையாட்டுகளையும் ஒருங்கிணைத்து Sports Village என்று சொல்லக்கூடிய வகையில், ஓர் ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தை அமைத்துக்கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு சாதகமான பதிலைத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

2019 ஜுலை 3]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு பிரச்சினைகளை இங்கே எடுத்து வைத்திருக்கிறார். ஒன்று, கன்னியாகுமரி தொகுதி, அழகப்பபுரத்தில் இடிந்துபோன, பழுதடைந்த அரசுப் பள்ளிக் கட்டடங்கள் இருக்கின்றன. அதை அப்புறப்படுத்திவிட்டு, அங்கே விளையாட்டு மைதானம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதை உடனடியாக விளையாட்டுத் துறைக்கே மாற்றுவதற்கு அரசு பரிசீலனை செய்யும் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து இடங்களிலும் ஒருங்கிணைந்த விளையாட்டு மைதானம் அமைப்பது சாத்தியமில்லை. ஏனென்று சொன்னால், நிதிப் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினால், ஓர் ஆண்டில் 5 அல்லது 6 மைதானங்களைத்தான் கொண்டுவர இயலும். ஆகவே, உங்களுடைய கோரிக்கையை அடுத்த ஆண்டு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள்.

திரு. அம்மன் கே. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும், எங்கள் மாவட்ட அமைச்சர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

கோயம்புத்தூர் (தெற்கு) தொகுதிக்குட்பட்ட நேரு ஸ்டேடியத்தில் உள் விளையாட்டரங்கம் அமைத்திட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டிலே அனுமதி அளித்து, அதற்கான நிதியையும் ஒதுக்கிவிட்டார்கள். ஆனால், அந்த இடத்தில் இதுவரை அதற்கான வேலை எதுவுமே நடைபெறவில்லை. நான் ஏற்கெனவே இரண்டு முறை இதைப்பற்றிக் கேள்வியும் எழுப்பியுள்ளேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நேரு ஸ்டேடியத்தில் உள் விளையாட்டரங்கத்தை விரைவில் கட்டுவதற்கு ஆவன செய்வாரா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நேரு ஸ்டேடியத்தில் உள் விளையாட்டரங்கம் கட்டும் பணிக்கு டெண்டர் விடுவதிலே கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டு, இடையில் ஒருவர் வழக்கு மன்றத்திற்குச் சென்றார். அந்த வழக்கு இப்போது முடிவுக்கு வந்திருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் அதைத்தான் சொன்னார்கள். மிக விரைவில், அந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

தெரு விளக்கு

***30389—திரு. கே. எஸ். மூர்த்தி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமத்தி–வேலூர் தொகுதி, பரமத்தி பேரூராட்சி, 1–வது வார்டு, மாதேசம்பாளையம் கிராமம், மாவுரெட்டி மேற்குத் தெருவிலிருந்து கிராம எல்லை வரை மின் கம்பத்துடன் கூடிய தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற கேள்வி, உள்ளாட்சித் துறையிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி என்று நினைக்கின்றேன். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பரமத்தி பேரூராட்சி, 1–வது வார்டு, மாவுரெட்டி மேற்குத் தெருவிலிருந்து மாதேசம்பாளையம் ஊர் எல்லை வரை தெரு விளக்கு அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள்.